**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.** 88 **நாள்**: 10.02.2026

**மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற உத்தரவின்படி, சென்னை மெரினா கடற்கரையில் அமைக்கவுள்ள 300 கடைகளுக்கான வியாபாரிகளை குலுக்கல் முறையில் தேர்வு செய்தல்**

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவுபடி, சென்னை மெரினா கடற்கரையில் அமைக்கவுள்ள 300 கடைகளுக்கான வியாபாரிகளை தேர்வு செய்வதற்கு, 12.02.2026 அன்று காலை 10.00 மணிக்கு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைந்துள்ள "அம்மா மாளிகை" கூட்டரங்கில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் தலைமையிலான, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் அடங்கிய இடைக்கால குழுவின் (Adhoc Committee) ஒத்துழைப்புடன் ஜம்மு-காஷ்மீர் உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசர் மேன்மைமிகு திரு.என்.பால் வசந்தகுமார் அவர்களின் மேற்பார்வையில் குலுக்கல் நடைபெறவுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிட வளாகம், “அம்மா மாளிகை” கூட்டரங்கில் நாளை 11.02.2026 மதியம் 02.30 மணிக்கு நடைபெறவிருக்கும் குலுக்கல் நடைபெறுவதற்கான ஒத்திகையினை ஜம்மு-காஷ்மீர் உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசர் மேன்மைமிகு திரு.என். பால் வசந்தகுமார் அவர்கள் மேற்பார்வையிட உள்ளார்.

**செய்தி வெளியீடு** : **இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**